## தலைப்பு 009 – நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபை - 2025

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 009 – நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபையின் 2025 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினாலும் ஏனைய விளக்கத் தகவல்களினாலும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2025 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2026 மே 19 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2026 ஜூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்களில் நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபையின் 2025 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் ஆகியவற்றுக்குரிய குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபையினதும் பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபையினதும், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 திசெம்பர் 17 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 02/2025 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நிருவாக மேன்முறையீடுகள் நியாய சபையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 2. ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம், பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவு மதிப்பீடுகள் சம்பந்தப்பட்ட விதிமுறைகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட வேண்டும் எனினும், ஆறு மீண்டெழும் செலவின வகைகளின் மதிப்பீட்டு ஏற்பாடுகளில் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான ரூபா 4,680,449 தொகையான ஏற்பாடுகளும், ஒரு மூலதனச் செலவினப் வகையின் மதிப்பீட்டு ஏற்பாடுகளில் 33 சதவீதமான ரூபா 33,000 தொகையிலான ஏற்பாடுகளும் | பணிக்கமர்த்தல் குறைவடைந்தமை, வார இறுதி மற்றும் விடுமுறை நாட்களில் அதிகப்படியான நேரக் கட்டுப்பாடுகள், கொடுப்பனவுகள் ஊதியத்துடன் சேர்க்கப்பட்டமை, எதிர்பார்க்கப்பட்டவாறு பயணச் செலவுகள் ஏற்படாதமை, காகிதாதிகள் சிக்கனமாகப் பயன்படுத்தப்பட்டமை, இரு அதிகாரிகளைத் தவிர மற்றைய அதிகாரிகள் சீருடைகளைப் பெற்றுக்கொள்வதற்குத் | மதிப்பீடுகளைத் தயாரிக்கும்போது சரியான முன்னறிவிப்புகளுடன் இயன்றவரை சாத்தியமான முறையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் |

| | |
|---|---|
| பயன்படுத்தப்படாமையால், மதிப்பீடுகள் குறித்த விதிமுறைகளின்படி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தகுதிபெற்றிருக்காமை, எதிர்பார்க்கப்பட்ட வாகன இயந்திர மென்பொருள் பழுதுகள் ஏற்படாமை, தபால் செலவுகள் குறைவடைந்தமை, மதிப்பீட்டு ஏற்பாடுகளை விடக் குறைந்த விலையில் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டமை மற்றும் காப்புறுதிப் கட்டணம் குறைவடைந்தமை ஆகிய காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. |

## 3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவு | அதிகார சபையின் முன்னைய ஆண்டுக்கான ஆண்டறிக்கையானது தகவல் அறியும் உரிமைப் ஆணைக்குழுவுக்கு 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்றும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில் லை. | தகவல் அறியும் உரிமைப் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட வேண்டிய ஆண்டறிக்கையை எதிவரும் காலங்களில் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டறிக்கை யை நிர்ணயிக்கப்பட் ட திகதிக்கு முன்னர் அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட வேண்டும். |
| (ஆ) | 2023 நவம்பர் 30 ஆம் திகதிய, 02/2018 (I) ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட, 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டுக்கான மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டுக்கான மனித வள அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கப்பட்டிராத காரணத்தினால், அதனை எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கையி ல் குறிப்பிடப்பட்டு ள்ள அறிவுறுத்தல்க ளின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் | | | |
| | நிதிப் பிரமாணம் 261(2) | காசோலை மூலம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்போது, காசோலையின் இலக்கம் | காசோலை இலக்கம், காசேட்டிலும் உறுதிசீட்டிலும் பதிவிடுவது தாமதத் தவறு | நிதிப் பிரமாணங்களு க்கு இணங்கச் செயற்படுதல் |

| | | |
|---|---|---|
| உறுதிச்சீட்டிலும் மற்றும் காசேட்டிலும் உரிய குறிப்புக்கு முன்னால் குறிப்பிடப்பட வேண்டும் எனத் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், ஆணைக்குழுவினால் 26 சந்தர்ப்பங்களுக்குரிய காசோலை இலக்கங்கள் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | என வினவப்பட்ட சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும், எதிர்காலத்தில் அவ்வாறு மீளவும் நிகழாதவாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 தூரநோக்கம் மற்றும் செயற்பணி

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2025 ஜனவரி 01 ஆம் திகதியன்று 1,074 மேன்முறையீடுகள் இருந்ததுடன், ஆண்டின் போது 837 மேன்முறையீடுகள் முடிக்கப்பட்டிருப்பதனால், ஆண்டின் இறுதியில் 910 மேன்முறையீடுகள் எஞ்சியிருந்தன. அவ்வாறு எஞ்சியிருந்த மேன்முறையீடுகளில், மேன்முறையீடுகள் பெறப்பட்ட திகதியின்படி நோக்கும்போது, 2 முதல் 4 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பெறப்பட்ட 297 மேன்முறையீடுகளும், 5 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்குரிய 115 மேன்முறையீடுகளும் காணப்பட்டன. | முன்னெடுத்து வரப்பட்ட மீதி, புதிய பொறுப்பளிப்புகள், முடிக்கப்பட்ட மற்றும் எஞ்சியுள்ள மேன்முறையீடுகள் மற்றும் அவற்றின் புள்ளிவிபரங்களைக் கொண்டு செயல்திறனை அளவிட முடியாது. ஒவ்வொரு மேன்முறையீட்டுக்கும் உரிய தனித்துவமான ஒவ்வொரு விடயங்கள் மீதும் கவனம் செலுத்தி, மேன்முறையீடுகள் தொடர்பான தீர்மானங்கள் வழங்கப்படுகின்றன. மேலும், ஒவ்வொரு ஆணைக்குழுக்களின் தீர்மானங்களுக்கும் எதிராக இந்தத் தீர்ப்பிற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகளின் தொகையானது, அது அனுமதித்துள்ள மற்றும் நிராகரிக்கப்பட்டுள்ள மேன்முறையீடுகள் மூலம் செயற்திறனைப் பிரதிபலிப்பதாக அமைகின்றது. | மேல்முறையீட்டு மனுக்களை தீர்ப்பதில் காலதாமதம் ஏற்படுவதை தவிர்க்கும் நடைமுறை தயாரிக்கப்பட வேண்டும் |

## 4.2 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய, 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி மற்றும் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிக்கு இணங்க, பொறுப்பு பிரதேசங்கள், செயற்பாடுகள், உள்ளீடு (Input) மற்றும் வெளியீடு (Output) ஆகியவற்றை உள்ளடக்கி 2025 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக விடப்பட்டமை காரணமாக 2025 ஆம் ஆண்டுக்கான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 2026 ஆம் ஆண்டுக்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு தங்களிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கும் வழிகாட்டலுக்கும் இணங்க வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

## 5. நல்லாட்சி

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 41 ஆம் பிரிவின் பிரகாரம் ஒவ்வொரு நிறுவனத்திற்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்க வேண்டும் எனினும், 2015 ஆம் ஆண்டு முதல் ஆணைக்குழுவின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அமைக்கப்பட்டிருக்கவில்லை | இவ் அலுவலகத்தின் ஊழியர்கள் மிகவும் மட்டுப்படுத்தப்பட்டவர்களாக இருப்பதனால் மாத்திரமன்றி, கணக்குகள் மற்றும் ஏனைய நிர்வாக நடவடிக்கைகள் குறிப்பாக நிதிக் கொடுக்கல் வாங்கல்கள், ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குதல் மற்றும் அவசியமான அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் போன்றவற்றுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாலும், அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் குழாத்தில் கணக்காய்வு அலுவலர் ஒருவர் அங்கீகரிக்கப்படாத காரணத்தினாலும், குறிப்பாகக் கணக்காய்வு அலுவலர்களை நியமிப்பது அரசாங்கத்திற்கு மேலதிக நிதிச் செலவை ஏற்படுத்துவதுடன் அவ்வாறு நியமிக்கப்படும் அலுவலர் ஒருவர் நிறைவேற்றுவதற்குரிய பணிச்சுமை இல்லாமை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் உரிய முறையில் நடாத்தப்பட வேண்டும். |

## 6. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவினால் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி 2025 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 32 ஆக இருந்தபோதிலும், நிரந்தர ஊழியர் 23 ஆக இருந்ததனால் பதவியணியில் 09 பதவிகளுக்கான வெற்றிடங்கள் தொடர்ந்தும் காணப்பட்டன. அத்துடன் செயலாளர், உதவிச் செயலாளர் ஆகிய சிரேஷ்ட மட்டத்திலான பதவிகள் ஒப்பந்த அடிப்படையில் 2017 ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டு நியமிக்கப்பட்டிருந்தன. | 2025 ஆம் ஆண்டில் ஊழியர் பதவியணியின் அவசியமான 04 வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். கணக்காளர் ஒருவர் பதிற்கடமை அடிப்படையிலும், செயலாளர் மற்றும் உதவிச் செயலாளர் அரச நிர்வாகச் சுற்றறிக்கை 3/2018 இன் கீழ் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். | செயற்திறனுடன் பகுப்பாய்வு செய்து, தேவைப்பாடு காணப்பட்டால் மட்டுமே ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |